# இந்து சமய அறநிலையத் துறை சார்பில் - சென்னை, கீழ்ப்பாக்கத்தில் உள்ள - காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற, கூடுதல் பள்ளிக் கட்டடத் திறப்பு விழாவில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பள்ளி மாணவ, மாணவியர் உற்சாகமாக வரவேற்பு அளித்த காட்சிகள் !
















சென்னை, தொழில்நுட்ப கல்வி இயக்ககத்தில் நேற்று (27.06.2025), உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் அவர்கள் 2025ஆம் கல்வியாண்டு பொறியியல் சேர்க்கைக்கான, தரவரிசை பட்டியலினை வெளியிட்டார். உடன் உயர்கல்வித் துறை செயலாளர் முனைவர் பொ.சங்கர், தொழில்நுட்பக் கல்வி ஆணையர் திருமதி ஜெ.இன்னசென்ட் திவ்யா ஆகியோர் உள்ளனர்.



சிவகங்கை மாவட்டம், கல்லல் மேற்கு ஒன்றிய தி.மு.க. இளைஞர் அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்தநாள் மற்றும் கழக அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டம் 25.6.2025 புதன்கிழமை மாலை கொரட்டியில் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் குன்றக்குடி எஸ்.குமார் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் தலைமைக் கழக இளம் பேச்சாளர் வழக்கறிஞர் கு.சுமித்ரா சிறப்புரையாற்றினார்.இதில் ஒன்றிய செயலாளர் ஆர்.சுப்பிரமணியன், வேலுச்சாமி அம்பலம், பெரி.முருகப்பன், தட்டட்டி அசோகன், பட்டமங்கலம் சந்திரன், மா.முத்தழகு,கீரணிப்பட்டி பழனியப்பன்,தென்கரை ராஜா, பாண்டியராஜன், டைல்ஸ் கணேசன், மணிமுத்து, சில்வர் ஸ்டார், வலையபட்டி லெட்சுமணன், பாரதிதாசன், அசோக்குமார் உள்ளிட்ட அனைத்துக் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.